"நாவுகை மாத்திரை"

print?

(வரிமம்)

# நாலுகை மாத்திரை

கணிதமுடன்,

ஆணும் பெண்ணும் கலந்து போகம் செய்யும் போது,
விந்துவும் நாதமாக விர்த்தாதி என்ற விமலக் குழியில் வீழ்ந்து
உந்தி முக்கோணுக்கு மேலே, நாற்கோணில், ஓரிதழின் மேல்
வசமாய்த் தொடர்ந்து கூடிக் கீழே எரிகலை இருபைகளாகும். 1

என்ற எரிகலையில் நின்று பிரிந்ததுதான் இரசகலை என்ப
தாகும். சொன்னதொரு கலையில்தான் இதழ் நூற்றியெட்டுப்
பைகளையே சுற்றியே தான் வளர்ந்திருக்கும்.
இருக்குமப்பா இதுகூடே இதழைந்துண்டு. ௨

ஐந்தான இதழிதுவின் பிராணவாயுவும், கூடியே
மூலவாயுவும் முக்கோணின் மத்தியில் யோனிவாயில் உள்ளான
எட்டுவிரலுக்குமேல் என்றறிந்து கொள்ளே. 3

அறிந்ததொரு யோனிவாய் எட்டு விரலின் மேல்
இரண்டு சமபாகம் ஒரு குழி நீரூற்றும், அதே குழிக்கு
நால்விரல் மேலதாக இருப்பதுவே இரசகலை. இரசகலையில்
நின்று இதழிதுவின் மத்தியத்தில் கீழ்நோக்கி வருவதுவே
கூடேச நாளம்.
நாளமது குழியினும் ஒரு விரல்வரை
வழியாகவே தான் இருக்கும் வசதியாக. 4

இந்த ஒரு விரல் அளவின் மேலேதான், உள்வட்டம்
இதழ்களெல்லாம் வளர்ந்திருக்கும்.
இதில்தானே சரச சுக மேவும் தோற்றம்.
அதே குழிக்கு, பக்குவமுன் கால் தோன்ற ஊதான ஜவ்வதுவும்
காவலாமே. 5

ஆனதனுல், அதனுள்பாகம் இரண்டு வறுவ தளம்.
இதனருகில்தானே சுவாசயமும். அதுவழியே வந்து தானே
இன்பமென்ற இடப்பாகம் கிழிந்து தோன்றும். சொன்னதொரு
குழியதுவின் இருவிரல்மேல் தகாளபடி என்றதொரு தளமுண்
டப்பா. உண்டான முக்கோண ஒருகோணத்தில் வலப்பாகம்
தனஞ்சயனின் வாசமப்பா. சொன்னதொரு தனஞ்சயன்தான்
கவர் ஆறுக, முழுப்பாகம், முக்கோணில் எழுந்து நின்று
வழி பிரிக்கும். சுவாசயத்தின் வசதிபோல வசதி என்ன?
தொப்புளின் வலப்பாகம் எரிகலையின் நின்று சுருண்டு
சிங்குழலின் இதழ்போல் வந்து, குண்டலித் தானத்தில் கூடி
முக்கோணில் பிரிந்து சங்குமுகக் குழியில் நிற்கிறது. 6

பிச்சதுவின் மலர் இதழ்போல் முக்கோணவாயில் ஒட்டி
யிருக்கிறது என்றால் எரிகலையில் நின்று சுற்றியசைந்து நாபியின்
உள்ளறையில் கூடிச் சங்கமுகக் குழியின் பெலனில் மலாசயம் 7
எனப்பட்டது வெளியாகிறது.

இப்படி, மாதாவின் உந்தியில் பூவட்டமாய்ப் பொறி
யசைந்து சாவானந்தம் பெலக்கின்றது. விந்து நாதமானது
கதிர்போலே சென்று சுரோணிதப்படி என்ற கருக்குழியில்
விழும்போது உதானனின் பெலத்தால் சுரோணிதம் சேர்ந்து,
விந்து மணியாகி, இதழில் ஒட்டி அரைமாப் போல் கரு அமை
கிறது. 8

விந்து சென்றால், ஏழு நாளும் 36 நாழிகையும் சென்ற
பின்புதான் மணி ஆகிறதும் ஆகி, வாலையுடைய கூம்பு
போலேயும் இதழ் போலேயும் இருக்கும். இருந்து அபான
வாயு நின்று உருவாகி இதழ் மூடி வளருகின்றது. 9

அதே சமயத்தில், மூன்று மாதத்தில் வாலையுடைய
பொதி வருவது போலே வளர்ந்து தணல் உண்டாகிறது.
பின்னீடு உடலும் பறந்து பஞ்சேந்திரியங்களும் கைகாலும்
பஞ்ச பூதங்களும் உண்டாகிறது என்றால் தலை உண்டான
பின்பு அங்கே ஒரு வட்டம் உண்டாகிறது. 10

அந்த வட்டத்தின் கீழே குமிழம்பூவின் இதழ்போலத்
தணல் மூடுகிறது. அது கட்டியாகிச் சுரோணிதம் சேருகிறது.
அப்போது சுரோணிதத்திலும் அபானனே நின்று சிரசிலும்
ரசகலையிலும் சேர்ந்து இதழ்களின் வட்டங்கள் மூடுகின்றன. 11

அவை கண், செவி, வாய், கீழ்நாடி, கன்னம், உதடு
நாக்கே. இவைகள் வட்டத்தின் உள்ளேதான். அச்சப்பிராண
கலை என்ற உப வாய்விலும் அபானனதில் பலனுங்கூடி
அச்சதில் பதிவு போலே அங்கங்கள் அமைகின்றன. 12

ஆகையால்தான் இதழ் ஒதுங்கிச் சூடு பிடித்துப்
பிறை என்னப்பட்ட ஒரு நாளம் கீழ் நாடியின் கீழே அருகில்
பதிகிறது. அதுவே தலையில் நாலு துண்டும் 5 காலங்களும்
9 தொடுவர்மங்களும் உண்டாகக் காரணமானது. 13

பிறகு 8 துண்டு எலும்புகளும் 6 பொய்கையும்
3 சுழியும் காதில் 64 அறையும், பின்னே புறக்காதில் ஒன்றரை
விரலுக்குக் கீழே அரை விரல் சதுரம் இரண்டிலும் 2 சுழியும்
உண்டு. 14

காதில் மோடெலும்பிலிருந்து மூளையின் அருகில் வந்து பிறை என்னப்பட்ட நாளமே உச்சியில் வெளி உண்டாக்கிகிறது. புறக்காதில் இருபுறமும் முன்னும் பின்னும் அரை விரல் ஆழம் பதிந்து 4 சுழியாகி இருக்கின்றது. 15

அதே குழியில் ஒரு விரலுக்குள் இரண்டு பக்கமும் இரண்டு சுழியும் உண்டு. அந்தச் சுழியில்தான் சப்த ஏந்திரம் விசிறிபோல் உள்காதறையில் தட்டுகிறது. அதனில் சுழியசைந்து தொனியுண்டாகிறது. 16

மூகத்தின் முன்னே மூக்கு, வாய், நாடி உள்நாக்குப் புற அருகில் தொண்டையின் அலகும் மண்டைச் சோற்றின் உள்ள பிச்சுவின் மத்தியிலிருந்து ௨ பொடி என்பும் 3 அடுக்கும் 1 சுழியும் மூக்கின்மேல் 1 துவாரமும் கீழ் ௨ துவாரமும் மேற்பாலமும் உண்டென்று அறியவும். 17

அதில் ௨ வர்மங்களும் முகத்தில் ௫ காவங்களும் 3 வர்மங்களும் 4 துண்டென்பும் ௨ மோடென்பும் 4 சிப்பென்பும் உண்ணாக்கில் ௨ துண்டும் அதில் ௨ சுழியும் உண்டு. 18

அதில் ௨ வர்மங்களும் 36 சிறு நரம்பும் நாடியில் கீழும் மேலுமாக காதினுடைய அருகு சென்னியில் வந்து சுற்றுகிறது. இதில் அதிக நரம்புகள் புஜத்திலும் சங்கிலும் பிடரியிலும் மார்பிலும் கீழ்நோக்கிச் செவினுடைய சர்வாட்டுதம் வரை உண்டாகிறது. பிறையில் கழுத்துண்டாகி 36 நொறுக்கென்பும் 6 சுழியும்; 19

3 இசைவும் 6 கண்டமும் 100 உறுப்பும் கொக்கின்கீழ் அரை விரல் சவுக்கும் ஒருகுழியும் நாளமும் சங்கென்பில் தொண்டைக் குழியும்; 20

அதற்குமேல் உச்சந்தலைவரை தேன் குழலின் துவாரம் போலெ மண்டையில் வந்து செவி இரண்டிலும் இரண்டாகப் பிரிகிறது. தலையில் நடுவட்டத்தின் மேல் தலைப்பிச்சும் தவக்குழல் வெளியும் அதன்கீழ் சிப்பென்பு இரண்டும் நொறுக்குத் துண்டு இரண்டும் சிப்பென்பிலேயே ஒட்டி அதிலிருந்து தான் முக்கோணின் துவாரங்கள் உண்டாகி உற்பனமாகிறது. 21

முக்கோணில் ௨ அடுக்கும் ஒருசுழியும் உண்டு. இதன் முன்வசமாகக் கண்ணினுடைய குழியும் இமைகளும் இருக்கின்றன. கண்ணினுடைய குழி இரண்டு விரல் ஆழமுண்டு. பின்னே சிமிழினுடைய சோறிய குழியிலும் மாமிசம் பொருந்திருக்கும். இதில் சூட்சாதி எந்திரங்கள் ஒளியாகித் தேயச் சேர்ந்து ஒளி உண்டாகிறது. 22

கண்ணினுடைய சதையிலிருந்து 17 சிறு நரம்பும்
சுண்டு சென்னி இரண்டிலும் காதுகளின் அருகிலும் வருகிறது. 23

நரம்பின் உள்ளறையில் மூக்கோணின் துவாரமென்ற
குழியும் தொண்டைக் குழியும் உள்நாக்கும் சங்கென்பில் தான்
ஒட்டி வருகின்றன என்றால் குருக்கினுடைய தாரை என்பில்
புறங்கழுத்தில் பொன் நட்டெல் வளைவில் நான் இசைவும்
அசையும் சுழியும் 3 துண்டும் உண்டு. 24

சரீரத்தினுடைய விவரம் தலைமுதல் நரம்புகளும்
வர்மங்களும் என்புகளும் இசைவுகளும் பிரிந்து முதுகில்
5 கோணத்தில் 4 ஜாங்களோடு கூடுகின்றன. அங்கே நக்கள்
உருண்டைச் சிப்பிக்கு 6 என்பும் 26 பொடி என்பும் 5 சுழியும்
4 பொய்கையும் கழுத்தினுடைய அசை அடங்கல்களும் உண்டு
என்று அறியவும். 25

பின்னே புஜத்தின் சிப்பியின் குறுக்கே வரியின்
2 வர்மங்களிலும் 4 பொய்கையுண்டு. அதிலிரண்டு காலங்களும்
6 வர்மங்களும் உண்டாகிப் பொய்கை நாலிலும் 4 சுழியும்
½ விரல் ஆழம் குழியும் உண்டு. 26

கைப்பூட்டு என்பதுவே அந்தச் சுழி என்றறியவும்.
அதே சுழியின் யந்திரங்கள் கொண்டுதான் கைகளுக்கு
அசைவு உண்டாகின்றது. அதற்கு முன்வசமாயிருக்கப்பட்ட
ஐங்கோணில் 60 சிறு நாளமும் 20 பொடி என்பும் தாரை
என்பிலிருந்து 16 வாரென்பும்; 27

கூம்பினுடைய கூட்டிலிருந்து 12 சிப்பி வாரும்
8 என்பும் பாம்பின் படம் ஆடியதுபோல் இரு நாடியும்
அறுகோணில் இருப்பு என்றறியவும் 28

என்றால் அதன் மறைவு இரண்டிலும் இரண்டு பொய்கையும்
கூம்பின் நடு மத்தியம் ஒரு குழியும் சுழியும் அதிலிருந்து
இடம் வலம் 1½ விரல் நீக்கி 2 பொய்கையும் சுழியும் பின்
தாரை என்பிற்குக் கீழ் இரண்டு மார்பிலும் அகலமாக
2 பொய்கையும் உண்டு. 29

என்றால், அதிலுண்டாகும் துடிப்பு அறுகோண மார்பினிலும்
அதனுடைய இருப்பு உந்தியிலாம். அதன்மேலே 2 சுழியும்
தொண்டைக்குழியிலிருந்து 3 விரலுக்குக் கீழ் ஒரு சுழியும்
இருக்கின்றது. 30

பின்னே, அறுகோணில் முனைக் காம்புகளைச் சுற்றி 8 சுழியும் ஆபதமும் 1௨ சுற்றுநரம்பும் ஊக்கென்புடைய கிழவும் தொண்டையின் கீழ் நரம்பினுடைய அருகும் மய்யத்தில் ஒரு துண்டும் உண்டு. பின்னும் அதின் தாணே புத்தி யிருப்பிடமும் குருநாடியின் சேர்ந்து அசைகிறது அறியலாம். அங்கேயிருந்து 1½ விரல் உயரத்தில் வலப்பாகம் ½ விரலின் காரீரல் ஒரு கூடு தோன்றிக் கூம்பின் வலப்புறம் பம்பரச் சுடரயந்திரத்தில் அமலாசயம் என்னப்பட்டது காரீரலிலிருந்து ஒட்டாயிருக்கிறது. 31

கூம்பிலிருந்து ஒரு சிறு குழல்போல வந்து சங்கினுடைய குழலில் பதிந்திருக்கிறது. அதின் சம்பந்தப்பட்டு அன்னக்குழல் சங்கு தொண்டைக் குழாயிலும் பிறையின் முகத்திலும் சென்று முக்கோணிலும் ஐங்கோணிலும் தாரையுண்டாகிக் கூடுமென்று வாரென்பும் நொறுக்கென்பும் உண்டாகின்றன. 32

என்றால், அறுகோணில் மேல் நோக்கிக் குருநாடியைத் தொட்டு மேல் வசமாய் 6 பிராணப்பை யுண்டாகிப் பிராண சுவாசத்திலும் வாயிலும் மூக்கிலும் தட்டுகின்றன. அதிலிருந்து அறுகோணில் மேல்நோக்கிக் குருநாடி தொட்டு மேல்பாகம் ஆறிலும் பிராணப்பை யுண்டாகின்றன. 33

காரீரலின் வலப்பாகம் கூடி நகர்வதுபோல முதுகினுடைய தாரையொடும் நாற்கோணில் தொண்டையின் அருகில் பக்குவாசயத்தின் இடப்பாகத்தோடு கூடிக் குருநாடி பின்னவாகி வருகின்றது. 34

அது அறுகோணில் முன்சொன்ன சுழி எட்டிலும் எட்டு வர்மங்களும் உண்டென்றால் குருநாடியின் உள்ளறையானது நேர் வர்மமாகும். இதிலும் இதன் வலமிடப் பாகங்களிலும் வர்மங்கள் கொள்ளக் கூடாது. 35

என்றால், பக்கமிரண்டு வர்மங்களும் 8-ம் போக 4 காலங்களும் இஃதல்லாமல் காரை என்பின் கீழ் இரண்டு காலமும் இரண்டு மார்பிலும் இடத்தும் வலத்தும் கைக்குழிக்கு ௭ விரலின் கீழ் ௨ காலங்களும் உண்டு. 36

பிறகு குறுக்கினுடைய தாரையில் பதிந்து 1௨ சுழியும் கையிரண்டிலும் 1௨ விசையும் கைமுட்டில் ௨ பாரென்பும் 6 ஓட்டுநரம்பும் உண்டு. 37

இன்னும் கைமுட்டில் ௪ மோளென்பும் இரண்டு பொய்கையும், ௪ சுழியும் உண்டு. அதன் கீழ் மொளியி லிருந்து ௨ கவராக ௪ பொடியென்பும் கைக்கூட்டின் மொளியில் வருகிறது. 38

பின்னே கையின் மணியில் குன்றி முத்துப்போல் ௪ மணியும் ௨ சுழியும் ௪ பொய்கையும் திரும்பும் உண்டு. அதிலிருந்து ௨ கோரென்பும் 10 சுழியும் நரம்பும் அந்த நரம்புகள் 10 விரலிலும் ௨8 மொளியிலும் கலந்திருக்கின்றன. உள்ளங்கையில் 6 வர்மங்களும் 60 சிறு நரம்பும் வெளிவர்மங்கள் 8-ம் உண்டு. 39

அதில் தொடுகாலங்கள் 8-ம், 810 சிறு நரம்பும் அதில் துடுக்கு வர்மம் மத்தியிலும் ௨ கையிலும் படுகாய வர்மங்களும் தொடு காலங்களும் உற்பவமாம். பின்னே கால் இரண்டிலும் தொடையில் மூலவாசலின் பொறியில் வழுவாக 6 என்பும் அங்கே ௨ குழியும் சுழியும் உண்டு. 40

பின்னே முக்கோணினுடைய ஒரு கோணத்தில் தண்டினருகில் எண் கோணம் என்றறியவும். அதில் தனஞ்செயன் பலம் கொண்டு தண்டை அசைக்கிறதும் அதன் இருப்பு ஸ்தானம் உருளைச் சிப்பி மத்தியில் முளைபோல் காண்பதிலாகும். 41

கிருக்கின் தாரை என்பின் பொருத்தும் அதே இடம் தான். அது லிங்கத்தின் வித்தின் பைக்குள் விருச்சகத்தில் ஓ மூலம்போல் இருக்கிறது. 42

ஆதலால் உருளையும் சிப்பியும் இருக்கப்பட்ட மொளியிலிருந்து 6 சிப்பென்பும் ௨ பொடி என்பும் சிப்பியின் கீழ்க் கோணிலிருந்து 8 விசை நரம்பும் ௨ காலுக்கும் பலமாகிறது. 43

ஆதலால் தான் முட்டின் சிரட்டையில் பிடிக்க அசைய ஏதுவுண்டாகிக் கீழ் என்பும் முகடுபோல் உண்டை லட்சணம் காட்டுகின்றன. 44

அங்கே ௪ கரண்டையும் ௨ பொய்கையும் ௪ சுழியும் உண்டு. முகட்டின் மேல் சிரட்டையும் அதன் கீழ் வளைவாக ௨ சுழியும் முழங்காலின் கீழ் ௨ என்பும் கீழ்க் கரண்டை என்ற மொளிக் கண்ணும் இந்த வகை என்பிலிருந்து என்றறியவும். 45

முட்டென்பு இரண்டியும் 4 கண்டமும் 2.பொய்கையும்
2 சுழியும் உண்டு. இதிகாலினுடைய நரம்பு கரண்டைக்காலின்
மொளியின்மேல் காணப்படுவதாகும். 46

அங்கொரு நருக்கென்பும் 12 சிறு என்பும்
பாதத்தின் மொளியினுடைய கண்ணும் அதன் கீழுருகில்
மிதியடிபோல் இரண்டு வளையென்பும் உப்புக்குத்தியில்
சுழியும் உண்டு. இதில் கூடிய நரம்புகளும் அதிகமுண்டு. 47

அதே இடத்தில் வலப்பாகமாக அந்தந்த இசைவுகளின்
பிரிவு நரம்புகள் தோன்றி அதனதன் விரல்களையும் மொளிகளையும்
அசையச் செய்கின்றன. இதன் உற்பவம் காலெலும்பிலும்
இதங்களிலுமிருந்து 10 நரம்புகள் உண்டாகி விரல்கள்
அசைகின்றன. 48

அடங்கல்களுக்கு மார்பு, தொண்டை இரண்டும்
அமர்த்தும். அமர்த்தி, பின் காலங்களின் குணம், குறி வயிறாதி
நாக்குத் தள்ளி வாசனையறியாமல் கிடந்தால் தொப்புளின்
கீழ்நோக்கிப் பிடித்தால் பேதியாகும். நாக்கு உள்ளிறங்கும்.
போதமுண்டாகும். மேல் போட்டுப் பிடித்தால் பேதி நிற்கும்.
அதன்பின் எட்டென்பினுடைய மூணவது பொய்கையில் குத்தினால்
காரிரல் சுருங்கும். கோச்சல் கொழுத்தல் குளிர்சுரமுண்டாகும். 49

நாலாவது என்பின் பொய்கையில் குருந்தில் குத்தினால்
வெள்ளிரல் இத்தும் வேதனையும் உண்டாகி, ஈரல் சுருங்கிப்
பல் நெறுநெறுவெனக் கடிக்கும். வாய் பூண்டு கொள்ளும்.
ஐந்தாவது என்பின் பொய்கைக் குருந்தில் குத்தினால் தொண்டைக்
குழியில் இத்தும் வேதனையும் கபமும் உண்டாகும்; கால்
அசைக்க முடியாது. 6வது பொய்கைக் குருந்தில் குத்தினால்
வலக்கால் அசையாது, விந்து சுருங்கிக் கொட்டாவி போடும்;
நெருமிச்சுண்டாகும்; வலப்புற மூக்கில் நீர் ஒழுகும். 50

ஏழாவது பொய்கைக் குருந்தில் குத்தினால் அபானம்
திறந்து பேதி போகும்; சுவாசம் கீழ் வாங்கும்; ஓர்மை மின்னாமல்
துடிக்கும்; மூக்கைச் சுளிக்கும்; கண் மூடும்; 18 ஆம் நாள்
மரிக்கும். 8 ஆவது பொய்கையின் குத்தினால் கை துடித்துக்
கை விளங்காதிருக்கும்; நாக்குச் சுருங்கும்; சென்னி
நரம்புகள் துடிக்கும்; கை கால் வெட்டும்; விக்கல்வரும்;
வேர்வையுண்டாகும்; ஏழில் மரிக்கும். செய்யாதே பாவம். 51

கையசைக்கிற தூங்குசதைப் பொய்கையில் குத்தோ, தள்ளோ கொண்டால் கை விளங்காது. கை ஒந்தித் திமிரும். கோச்சவும் நரம்பு வெட்டும் இறு காய்ச்சவும் குளிரும் உண்டாகும். இதற்கு நிதானம் கண்டு இளக்கவும். 52

கைச் சிப்பென்பிலிருந்து இரண்டுவிரற் கீழே கையேற்றிக் குத்தினல் கவிழ்ந்து வீழ்ந்து மண்ணைக் கவ்வும்; அலறும்; பைத்தியம் பேசும். இதற்குக் கை முட்டிற்குள்ளும் மூனும் பொய்கைச் சுழியிலும் பெருவிரலின் கவுளியிலும் மாத்திரை கண்டு தடவிப் பிடிக்கத் தீரும். 53

கைக் கிழியினுடைய பூட்டில் காந்தாரியில் கொண்டால் கை அசந்து சிப்பி நழுவிக் கை தாழ்ந்து காரிரலில் இரத்தம் உறைந்து குத்தும்; வேதனையும் சரீரத்தின் தரிப்பும் முகமும் கோணி ஜன்னியுமுண்டாகிக் கண் மஞ்சள்போல் தோன்றி மரிக்கும். 54

என்றல்; கை புஜத்தில் வரினென்பில் 3-வது பொய்கையில் வர்மங் கொண்டால், தலை சுற்றவுண்டாகி வயிறு மந்திக்கும்; சரீரம் குன்னும்; குளிர் சுரம், சுவாச மடைப்பு; மூலாதாரத்தில் வேதனை, கைகால் பலக்கேடு, இரத்தம் கக்கி 18-ல் மரிக்கும். இருபுறமும் இதுவர்மம் உண்டு. 55

உந்தியில் குத்தோ பிடியோ அடியோ கொண்டால் சரீரம் துடிக்கும். இதில் வர்மம் கொண்டால் தாரை என்பு வளைந்து கூனும்; குரலை அடைக்கும்; நாக்குந் துடிதுடிக்கும்; கண்மூடி ஜன்னியுண்டாகும். பொறி அசந்து, சுவாசம் முட்டி, மலஜலம் அடைத்து மூக்கில் சளிவந்து விந்து பதைந்து ஆந்திரத்தில் திமிர் தோன்றி ௨8-ல் மரிக்கும். 56

பின்னே, கண்ணுதிரி என்ற சிப்பெண்பின் உள்ளே குதிகாலின் சிறு நரம்பிடையில் ௨ சுழியும் 4 பொய்கையும் 6 பொடியென்பும் 4 சிப்பென்பும் உண்டு. பெருவிரலின் நரம்புதான் மேல் பிறையில்வந்து அங்கிருந்து பூவின் இசைகள்போல் 4 ஆயிரமாய்ப் பிரிந்து கபாலத்திலும் சென்னி இரண்டிலும் சங்கென்பினுடைய ஸ்தானத்திலும் அடிநாக்கிலும் சுற்றுவது இந்த நரம்பினுடைய தொடர் என்றறியவும். 58

காலின் பின் உருளை அடுக்கில் இடம், வலம் இரண்டு
பொய்கையுள்ளதில் 2 வர்மமுண்டு. இதில் இடியோ,
குத்தோ, தள்ளோ கொண்டால் அசைந்து நடக்க முடியாமல்
சரீரத்தில் குத்தும் வேதனையும் இருப்பிற்குப் பலக்குறைவும்
சலாசயம் விழுகிறது போல இளைத்தரிப்பும் உண்டாகி
இரத்தம் குறைந்து ஜலத்தைக் கெட்டிப் பிடித்து (பருத்தி)
90-ல் மரிக்கும் 57

---

அச்சுப்போல உற்பவித்த எண்சாணில் பொருத்து
களிலும் செவியிலும் சுழிகளிலும் நடு என்பு சேர்ந்தது
போல் பின்னலான சிறு நரம்புகளுண்டாகிப் பாதத்தில்
18 வர்மமும் உண்டாகி 72 ஆயிரம் நாடியும் 22 குப்பியும்
அதில் 40 வாலென்பும் 12 உருளையும் 6 பொய்கையும் 59
உண்டாயிற்று.

---

ஆகிய 10 வாயுவும் பொருத்துகளில் சுவாசப் பெருக்கத்
துவாரமும் (ஆதித்திய) சூரியசந்திர மண்டலங்களும் ஒழிகளும்
மூலஸ்தானங்களும் துருத்தியும் பஞ்சேந்திரியங்களும் இடைக்கலங்களும்
? சாலோப சாரூப சாமீப சாயுட்சியமும் அழியாத கலையும் குடலி
னுடைய பையறைகளும் பஞ்சபூதங்களின் இருப்பிடங்களும்
60 நாழிகைக்கு 21600 சுவாசங்களும் இட, பிங்கலை, சுழிமுனை
என்ற கேசங்களின் வளர்ச்சியும்;
வாத, பித்த, சிலேற்பனமாகி அதனுடைய உதாரணம்
குருநாடியும் இடை எந்திரமும் நட்டெண்பினுடைய 60
சுழிபோக 108 வர்மங்களும்;

---

ஐந்து கண்டங்களும் 3½ கோடி ரோமங்களில்
4000 வலு ரோமங்களும் நற்சுழிகளும் 96 தத்துவாதிகளும்
ஆறு ஆதாரமும் 9 துவாரங்களும் 6 கலையும் 4 மடங்கும்
12 முடிச்சும் 51 அட்சரங்களுங் கூடிப் பாவை போல
உண்டாகி முதலில் இரத்தம் தோன்றி மாமிசமுண்டாகிப் 61
பின்னே ரோமாதிகள் உண்டாகின்றன.

இப்படி உண்டாகித் தொப்புளின் துவாரத்தின்
வழியாய்த் தாயினுடைய அன்னமயம் சென்று சிசுவை
வளர்க்கின்ற பின்னே இரசகலை என்பதில் உண்டு திரும்பித்
தலை நோக்கிக் கொடிகள் தொடர்ந்து சிசுவினுடைய உச்சியில்
ஜலம் கும்பம் போல் பையில் தங்கியிருக்கும். அதன் பக்கத்தில் 62
இரைப்பையின் வலப்பாகத்தில்தான் உதானனுடைய இருப்பு.

பிற்பாடு, மாதாவின் சர்வாயுட் சிதம் பூரண வேதனை
யுண்டாகி உதானனின் பலத்தால் அசைந்து சிசுவினுடைய
இருப்பிடம் படி தளர்ந்து பூமியில் பிரசவிக்கின்ற உற்பவத்தில்
தொடர்கிற பயணமாகி வளர்ந்து நரம்பிலும் என்பிலும்
இரத்தம் கலந்து சரீரம் பருத்துத் தன்னுடைய அளவில்
எட்டுச்சாண் நீளமும் 4 சாண் பருமனும் ஏழு மறைவாசல்களும்
உண்டாகின்றன. மனிதன் தலையில் சிறுங்கொல்லி ருத்திரக்
காலம், சொர்ண காலம், துடிக்காலம்... ... ... இப்படி
ஐந்து காலங்கள் உண்டென்றறியவும். பின்னே உச்சியின்
துடிக்காலமும் அதன்பின் ஒன்றரை விரலில் தலையோட்டில்
நேர் பொய்கை வலப்பாகம் கொம்பேறிக் காலமும் இடப்பாகம்
சிறுங்கொல்லியும் இப்படி ஐந்து தொடு காலங்களும் மேல் 63
ஒரு வர்மமும் உண்டு.

துடிக்காலம் கொண்டால் தலைக்குப் போதக் கேடும்
உளைவும் செவிக்குத்தும் வேதனையும் தலையில் பிசின் போல்
கசிவும் கண்ணில் சதையும் படர்ந்து காணும். இதற்கு
உப்பும், வெற்றிலையும், சுக்கும் சிதைத்து உச்சியிலிருந்து
கழுத்துவரை பூசி காதினுடைய மேல் வசம் பொய்கை நோக்கி
இரண்டு பக்கமும் விரல் கொண்டு ஊன்றி உச்சியில் 16 தடவை
தடவப் போதம் உண்டாகி இளகும். பின்னில், சீனியும்,
கிக்கிலும் கூபநீரும் வெள்ளரத்தையும் கொம்பரக்கும்
கருகு ரோகணியும் வகைக்குக் கழஞ்சு 3 வீதம்
மலைதாங்கிச் சாறு நாழி; வேலிப்பருத்திச் சாறு நாழி, உரித்
தேங்காயெண்ணெய் நாழி மெழுகு பதம் வடித்துத் தேய்க்கவும்.
96 நாள் ரோகிக்குத் தேய்த்தால் சுகம் உண்டாகும்.

ருத்திர காலம் கொண்டால் கண்ணுருண்டு
மூக்கிலிருந்து நுரையும் காலில் இரத்தமும், கண்ணில்
காயமும் புலப்படும். தலையில் உருட்டி வேதனையும்
புத்தி மந்தமும் உண்டாகும். இதற்குப் புறங்கழுத்தில்
பேன் குழியில் விரல் ஊன்றிப் பிடித்து வட்டம் முழுவதும்
தடவச் சுகம் உண்டாகும். இதற்கு நாழிகை இருபது. 64

இதற்கு வயதில் கிழங்கு, சதாவேரி, நன்னாரி, கண்டங்கத்தரி,
வகைக்குச் சாறு உழக்கு வீதம் சேர்த்துச் சீனியும் சித்திரமூலக்
கிழங்கும் கழஞ்சு சேர்த்து எண்ணெயில் காய்ச்சி மெழுகு
பதம் வடித்துத் தேய்க்கவும்; சுகம் உண்டாகும். கொம்பேறிக்
காலம் கொண்டால் மூக்குச் சளிப்பும் சன்னியும் அவறலும்
முகத்தில் வேர்வையும் தலைக்கு விரயலும் கிறுகிறுப்பும்
காதினுடைய குழியில் துடிப்பும் உண்டாகும். இதற்கு
மூடில்வாத்தாணி இடித்துப் பிழிந்து பழுக்க அரைத்துத் தலையின்
போட்டுச் சென்னிவட்டம் தேய்த்துச் சுக்குத்தாள் காதில் ஊதத்
தீரும். 65

இளகினும் இதற்கு நாழிகை 19. இது கழிந்து 3½ நாழிகைக்குப் பின்தான் இளக்க வேண்டும். வர்மம் இரண்டிற்கும் இப் பிரகாரமே ஆகும். மூக்கினுடைய பாலமும் கண்களின் இமையும் இதுபோன்ற பொருத்துகளாகும். அதில் மேல் பொருத்தில்தான் திலர்த காலம் என்னும் சுழிமுனை ஸ்தானம், அதில் முறிந்து இரத்தம் கொட்டினால் வாய் பிளந்து கண்ணடைத்துச் சன்னியுண்டாகும். வாயில் நுரை பாயும். சென்னி நரம்புகள் துடிக்கும். புறந்தலையில் சூடு பிடித்துக் கபமும் உண்டாகும், பொறி தாழ்ந்திருக்கும் கழுத்து விறைக்கும். நிச்சயம் 3¾ நாழிகைக்குள் மரிக்கும். 66

<u>நட்சத்திரக் காலம்:</u>

கண்ணின் கடைப்பாகம் குழியாகும். அது கொண்டால் மூச்சு உண்டாகி உறக்கம்போல் இருக்கும். கண்ணுருண்டு செவி இரைச்சலும் தலைக்குப் போதக்கேடும் கழுத்தில் நரம்புத் துடிப்பும் உண்டாகும். இதற்கு நாழிகை 27 கடந்து தடவி இளக்கவும்.

<u>தடவு முறை:</u>

நாடியை ஏந்திப் பிடித்துப் புறங்கழுத்தில் பேண்குழியில் விரல் ஊன்றிப் பிடித்துச் சென்னி இருபுறமும் இப்படியே செய்து, கீழ் நாடியைக் கீழ்நோக்கித் தடவத் தீரும். அதினும் தீராவிட்டால் தொண்டையின் கொக்கிக்கு அரைவிரல் உள்ளே வலக்கைப் பெருவிரல் கொண்டு ஊன்றவும். ஊன்றிய பின் அதில் அசைவில் விரல் ஊன்ற அமிழ்த்தவும்; நிச்சயம் இளகும். 67

பின்னே இந்த வர்மத்திற்குக் கழுத்தில் ஒரு நரம்பு அசைவு உண்டாகும். அதற்குச் சூரிவேர்த்தொட்டி, சங்கு, மலைதாங்கி, முடில்வாத்தாழி, காட்டு நாரத்து, இலைத்தறி, கூவளம்வேர், கண்டங்கத்தரி, குமரி வகைக்குக் கழஞ்சு 3 வீதம் சேர்த்து முந்நாழி ஜலம் வற்ற வைத்து 3 நாள் 6 நேரம் கொடுக்கவும். 68

சென்னி காலம் கொண்டதனில் ஒருபக்கம் சரிந்து
இமிர்த்து விழும்; அலறும்; மூக்கில் நீர் வடியும்;
வாய்பூட்டி உணர்ச்சை கெட்டுக் கிடக்கும். இதை
இளக்குவதற்குத் தலையை ஏந்திப் பிடித்துக் கழுத்தை
அசைத்துக் காதுப் பொய்கையில் விரல் ஊன்றி
இளக்கவும் இளகும். உபதேசப்படி பொய்கை
யறிந்து பிடிக்கவும். நெற்றியில் தடவி உச்சியில்
அமர்த்தவும். பதைப்பின் அருகு பொய்கையில்
ஊன்றிப் பிடிக்கவும் என்றால் முழங்கை அடங்கவும்
விரலினுடைய நிதானம் நிச்சயங் கண்டு உஷக்கேறமல்
பிடிக்கவும். 69

செவிக்குத்திக் காலம் என்பது காதின்
கீழ்த்தாணே சுழியென்ற பொய்கையிலாமே.
அதிலிருந்து $1\frac{1}{2}$ விரலுக்கு மேலே அவவாடி என்ற
வர்ம மாகும். அல்வவுடைய கருவள என்பு வந்த
பொய்கையில் சுழி $1\frac{1}{2}$ விரல் ஆழமும் தொண்டை
திறக்க அவவாடியும் அறியலாம். 70

பின்னே காதினுடைய அருகில்
தலையோடென்பும், நெற்றியும், வந்துசேரும்
பொருத்தாகும். அதில் ஒரு மஞ்சாடி பதிய ஒரு
குழியும் சுழியின் திருக்குமுண்டு. அதனருகில் $\frac{1}{2}$
விரல் 4 அடங்கல்கள் உண்டு. அடிகளின் ஊக்கத்தால்
கண் வெளியில் தள்ளினில் பொய்கைக் காலம்
இரண்டிலும் விரல் கொண்டு மேல் நோக்கி அமிழ்த்தக்
கண் உள்ளே போகும். கை முட்டுக் கொண்டு முதுகு
வரியில் ஊன்றவும்; கண் வெட்டில் சரியாகும். 71

முற்றும்.

